Royal College of Anaesthetists

Association of Anaesthetists

# பெரிய அறுவை சிகிச்சைக்கான உங்கள் மயக்க மருந்து

## அதன்பிறகு உயர் சார்பு அல்லது தீவிரச் சிகிச்சைத் திட்டமிடலுடன்

பெரிய அறுவைச் சிகிச்சைக்கான மயக்க மருந்து ஒன்றைப் பெறும்போது, அதன்பிறகு உயர் சார்புப் பிரிவு (HDU) அல்லது தீவிரச் சிகிச்சைப் பிரிவில் (ICU) தங்கவேண்டியிருக்கும்போது என்ன எதிர்பார்க்கலாம் என்று இந்தச் சிற்றேடு விளக்குகிறது. இது நோயாளிகள் மற்றும் நோயாளிகளுடைய பிரதிநிதிகளுடைய உதவியுடன் மயக்க மருந்து மருத்துவர்களால் எழுதப்பட்டுள்ளது.

இந்தச் சிற்றேடு வெவ்வேறு வகை மயக்க மருந்துகளைப்பற்றிப் பேசவில்லை. நீங்கள் அதுபற்றித் தெரிந்துகொள்ள விரும்பினால், **நீங்களும் உங்கள் மயக்க மருந்தும்** என்ற சிற்றேட்டைத் தயவுசெய்து படியுங்கள். இது எங்கள் இணையத் தளத்தில் உங்கள் மொழியில் கிடைக்கிறது: www.rcoa.ac.uk/patientinfo/translations

### உள்ளடக்கம்

இந்தச் சிற்றேடு இவற்றை விளக்குகிறது:

- அறுவைச் சிகிச்சைக்குப்பிறகு ICU அல்லது HDUவில் தங்குவதுபற்றி
- அறுவைச் சிகிச்சைக்குமுன் என்ன நடக்கும்
- அறுவைச் சிகிச்சைக்குத் தயாராவது எப்படி
- அறுவைச் சிகிச்சை நாளில் என்ன நடக்கும்
- அறுவைச் சிகிச்சைக்குப்பிறகு என்ன நடக்கும்
- உங்கள் மயக்க மருந்து மருத்துவருடன் ஆபத்துகள் மற்றும் தெரிவுகளை விவாதிப்பது எப்படி
- மேலும் தகவல்களை எங்கு கண்டறிவது.

## பெரிய அறுவைச் சிகிச்சை மற்றும் தீவிரச் சிகிச்சை

தீவிரச் சிகிச்சை மற்றும் உயர் சார்புப் பிரிவுகள் என்பவை, தீவிர நோய் கொண்ட நோயாளிகளைக் கவனித்துக்கொள்கிற சிறப்பு மருத்துவப் பிரிவுகள் ஆகும். பெரிய அறுவைச் சிகிச்சைக்குப்பிறகு, சில நோயாளிகள் ஓர் ICU அல்லது ஒரு HDUக்கு அழைத்துச்செல்லப்படுவார்கள். அங்கு, சிறப்புப் பயிற்சி பெற்ற செவிலியர்களும் மருத்துவர்களும் அவர்களைக் கவனமாகக் கண்காணிப்பார்கள். வழக்கமான மருத்துவப் பிரிவுகளில் பொதுவாகக் கிடைக்காத சிகிச்சை மற்றும் கருவிகளை ICUக்கள் மற்றும் HDUக்கள் வழங்கலாம். உங்கள் அறுவைச் சிகிச்சைக்குப்பிறகு நீங்கள் ஓர் ICU அல்லது HDUல் தங்கவேண்டியிருக்குமா என்பதுபற்றி உங்கள் அறுவைச் சிகிச்சை மருத்துவர் அல்லது மயக்க மருந்து மருத்துவர் உங்களுடன் பேசுவார்.

# பெரிய அறுவைச் சிகிச்சைக்கான அறுவைச் சிகிச்சைக்கு முந்தைய மதிப்பீட்டு மருந்தகம் (முன் மதிப்பீட்டு மருந்தகம்)

பொதுவாக, உங்கள் அறுவைச் சிகிச்சைக்குச் சில வாரங்கள் முன்பாக நீங்கள் அறுவைச் சிகிச்சைக்கு முந்தைய மதிப்பீட்டு மருந்தகம் ஒன்றுக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படும். உங்களுக்கு ஆதரவாக ஒரு குடும்ப உறுப்பினர் அல்லது நண்பரை உடன் அழைத்து வருவது பயனுள்ளதாக இருக்கும்.

தயவுசெய்து, இவற்றை உங்களுடன் கொண்டுவாருங்கள்:

- நீங்கள் எடுத்துக்கொண்டிருக்கும் மருந்துகளின் பட்டியல் அல்லது அவற்றின் இயல்பான பொதியுடன் உங்கள் மருந்துகள்
- மற்ற மருத்துவமனைகளில் நடந்திருக்கக்கூடிய பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகளைப்பற்றி உங்களிடம் உள்ள எந்த ஒரு தகவலும்
- மயக்க மருந்து தொடர்பாக உங்களுக்கோ உங்கள் குடும்பத்தினருக்கோ இருந்திருக்கக்கூடிய ஒவ்வாமைகள் அல்லது பிரச்சனைகளைப்பற்றிய தகவல்
- சமீபத்திய இரத்த அழுத்த அளவீடுகள் (கைவசம் இருந்தால்)

செவிலியர் ஒருவர் உங்கள் நலன் மற்றும் செயல்பாட்டு நிலைகளைப்பற்றிய விரிவான கேள்விகளை உங்களிடம் கேட்பார்.

- இரத்தப் பரிசோதனைகள், ECG (எலக்ட்ரோ கார்டியோகிராம் அல்லது இதயப் பின்தொடர்தல்) மற்றும் சில நேரங்களில் மற்ற பரிசோதனைகள் செய்யப்படும் அல்லது கோரப்படும். உங்களுடைய இதயமும் நுரையீரல்களும் ஓய்வின்போதும் உடற்பயிற்சியின்போதும் எவ்வளவு நன்றாக வேலைசெய்கின்றன என்பதைப் பார்ப்பதற்கென, நீங்கள் ஓர் உடற்பயிற்சி மிதிவண்டியில் CPET (இதய நுரையீரல் உடற்பயிற்சிச் சோதனை) செய்துகொள்ளவேண்டும் என்று கோரப்படலாம். அறுவை சிகிச்சை மற்றும் குணமாதலை உங்கள் உடல் எந்த அளவுக்குச் சமாளிக்கும் என்பதை ஊகிக்க உதவுவதற்கு இது பயன்படுத்தப்படலாம். உங்களுக்கு அறுவைச் சிகிச்சை எந்த அளவு ஆபத்தானது என்றும், நீங்கள் ICU அல்லது HDUல் குணமாகவேண்டுமா என்றும் மருத்துவர்கள் தீர்மானிப்பதற்கு இது உதவும்.
- அறுவைச் சிகிச்சைக்குமுன்பாக உங்களுடைய உடற்தகுதியை மேம்படுத்துவதற்கென நீங்கள் ஓர் உடற்பயிற்சி மற்றும் ஊட்டச்சத்துத் திட்டத்தில் பங்கேற்கவேண்டியிருக்கலாம். இது 'முன் மறுவாழ்வு' என அழைக்கப்படுகிறது.

- மயக்க மருந்து மருத்துவர் ஒருவர் மயக்க மருந்துபற்றியும், குறிப்பாக உங்களுக்கு இருக்கக்கூடிய ஆபத்துகளைப்பற்றியும் உங்களிடம் பேசலாம். அப்படி யாரும் உங்களிடம் பேசாவிட்டால், நீங்கள் மயக்க மருந்து மருத்துவர் ஒருவரிடம் பேச விரும்பினால், இதற்கு ஏற்பாடு செய்யும்படி நீங்கள் கேட்கவேண்டும்.
- உங்களுக்கு மற்ற மருத்துவ நிலைகள் இருந்தால் (எடுத்துக்காட்டாக, நீரிழிவு, ஆஸ்துமா, உயர் இரத்த அழுத்தம், இரத்த சோகை அல்லது வலிப்பு), மருந்தகத்தில் உள்ள பணியாளர் உங்களிடம் அவற்றைப்பற்றிக் கேட்பார். அவற்றை மேம்படுத்த இயலும் என்றால், நீங்கள் வேறு சிறப்பு மருத்துவர்கள் அல்லது உங்களுடைய சொந்த GPஐச் சந்திக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படலாம். சில நேரங்களில், உங்கள் சிகிச்சையில் மாற்றங்கள் தேவைப்படலாம். சில நேரங்களில், உங்கள் நலன் மேம்படும்வரை உங்கள் அறுவைச் சிகிச்சையைத் தள்ளிப்போடவேண்டியிருக்கலாம்.
- அறுவைச் சிகிச்சைக்குமுன், அறுவைச் சிகிச்சையின்போது, அதன்பிறகு என்ன நடக்கும் என்பதுபற்றிய சில தகவல்களைச் செவிலியர் வழங்குவார். கேள்விகள் கேட்பது, எந்தவொரு கவலைகளையும் விவாதிப்பது ஆகியவற்றுக்கு இது ஒரு நல்ல நேரம்.
- உங்கள் அறுவைச் சிகிச்சைக்கு முன் எப்போது சாப்பிடுவதை மற்றும் குடிப்பதை நிறுத்தவேண்டும் என்பது பற்றி உங்களுக்குத் தெளிவான உதவிக் குறிப்புகள் வழங்கப்படும். இந்த அறிவுரையை நீங்கள் பின்பற்றுவது முக்கியம். உங்களுக்கு மயக்க மருந்து வழங்கப்படும்போது உங்கள் வயிற்றில் உணவு அல்லது நீர்மம் ஏதேனும் இருந்தால், அது உங்கள் தொண்டைக்கு வரலாம், உங்கள் நுரையீரலில் நுழையலாம்.
- நீங்கள் எடுத்துக்கொண்டிருக்கக்கூடிய எந்த ஒரு மருந்தைப்பற்றியும், உங்கள் அறுவைச் சிகிச்சை நாள்வரையில் நீங்கள் அவற்றைத் தொடர்ந்து எடுத்துக்கொள்ளவேண்டுமா என்பதுபற்றியும் உங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படவேண்டும்.

அறுவைச் சிகிச்சைக்கும் குணமாகும் காலகட்டத்துக்கும் நீங்கள் உங்களைத் தயார்செய்துகொள்வதற்குப் பல விஷயங்களைச் செய்யலாம். தங்களுடைய நலனையும் செயல்பாட்டு நிலைகளையும் மேம்படுத்திக்கொள்ள இயலுகிற, கூடுதல் உடற்தகுதி கொண்ட நோயாளிகள் அறுவைச் சிகிச்சையிலிருந்து இன்னும் விரைவாகக் குணமாவார்கள், அவர்களுக்குச் சிக்கல்களும் குறைவாகத்தான் இருக்கும்.

நீங்கள் இன்னும் நல்ல உடற்தகுதி பெறவும், உங்களுடைய அறுவைச் சிகிச்சைக்கு இன்னும் நன்றாகத் தயாராகவும் உங்களுக்குத் தேவைப்படும் தகவல்களை எங்களுடைய **இன்னும் விரைவாக மேலும் உடற்தகுதி பெறுங்கள்** வளங்கள் வழங்கும். உங்கள் மொழியில் மேலும் தகவல்களுக்கு, தயவுசெய்து எங்கள் இணையத் தளத்தைப் பாருங்கள்: www.rcoa.ac.uk/patientinfo/translations

## அறுவைச் சிகிச்சை நாளன்று

சாப்பிடுதல், குடித்தல் மற்றும் உங்கள் மருந்துகளை எடுத்துக்கொள்ளுதல்பற்றி உங்களுக்கு வழங்கப்படும் அறிவுறுத்தல்களை நீங்கள் கவனமாகப் பின்பற்றவேண்டும்.

### உங்கள் மயக்க மருந்து மருத்துவரைச் சந்தித்தல்

முன் மதிப்பீட்டு மருத்துவமனையில் நீங்கள் ஒரு மயக்க மருந்து நிபுணரை சந்திக்கலாம். இல்லாவிட்டால், உங்களுடைய அறுவைச் சிகிச்சை நாளன்று மருத்துவமனையில் நீங்கள் உங்களுடைய மயக்க மருந்து மருத்துவரைச் சந்திப்பீர்கள். மயக்க மருந்து மருத்துவர்

என்பவர் மயக்க மருந்து வழங்கல், வலிக்கான சிகிச்சை மற்றும் ICUல் உள்ள நோயாளிகளுடைய பராமரிப்பில் சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவர் ஆவார்.

அவர் இவற்றைச் செய்யலாம்:

- உங்கள் நலத்தைப்பற்றி உங்களிடம் மீண்டும் கேட்கலாம், முன் மதிப்பீட்டு மருந்தகத்தில் பதிவுசெய்யப்பட்ட தகவல்களைத் தெளிவுபடுத்தலாம் அல்லது உறுதிப்படுத்தலாம்
- உங்கள் பரிசோதனை முடிவுகளை ஆராயலாம்
- உங்கள் இதயத் துடிப்பு, மூச்சுவிடலைக் கவனிக்கலாம்
- உங்கள் கழுத்து, தாடை, வாய் மற்றும் பற்களைக் கவனிக்கலாம்.

மயக்க மருந்து மருத்துவர் உங்களுடைய மயக்க மருந்தைப்பற்றி, அறுவைச் சிகிச்சையின்போதும் அதன்பிறகும் உங்களைக் கவனித்துக்கொள்வதற்குத் தேவைப்படக்கூடிய கூடுதல் செயல்முறைகளைப்பற்றி உங்களிடம் பேசுவார், வலியைக் குறைத்தலுக்கான முறைகளை விவாதிப்பார். மயக்க மருந்தைப்பற்றிய உங்களுடைய கேள்விகளுக்கு இவரால் பதிலளிக்க இயலும், உங்களுடைய கவலைகளைப்பற்றி விவாதிக்க இயலும்.

## அறுவை சிகிச்சைக்குத் தயாராதல்

- நீங்கள் அறுவைச் சிகிச்சை அரங்க அங்கிக்கு மாறவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுவீர்கள், சுருக்கக் காலுறைகளுக்கு உங்களுடைய அளவு எடுக்கப்படலாம். இவற்றை அணிவது உங்கள் கால்களில் இரத்தக் கட்டிகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு உதவுகிறது.
- உங்களுக்கு மேலும் சில இரத்தப் பரிசோதனைகள் நடத்தப்படலாம்.
- ஊழியர் உறுப்பினர் ஒருவர் ஒரு சரிபார்ப்புப் பட்டியலை நிறைவுசெய்வார், உங்களை அறுவை சிகிச்சை அரங்கத்துக்கு அழைத்துச்செல்வார். நீங்கள் அறுவைச் சிகிச்சை அரங்குக்கு நடந்து செல்வீர்கள் அல்லது ஒரு சக்கர நாற்காலி அல்லது தள்ளுவண்டியில் அழைத்துச்செல்லப்படுவீர்கள்.
- நீங்கள் மூக்குக் கண்ணாடி, கான்டாக்ட் லென்ஸ், காது கேட்க உதவும் கருவி அல்லது செயற்கைப் பற்களை அணிந்திருந்தால், நீங்கள் அவற்றை அணிந்தபடி அறுவைச் சிகிச்சை அரங்கத்துக்குச் செல்லலாம். மயக்க மருந்து கொடுக்கப்படுவதற்குமுன் நீங்கள் இவற்றை நீக்கவேண்டியிருக்கும். இதன்மூலம், இவை சேதப்படாமல் அல்லது இடம் மாறாமல் பாதுகாக்கலாம்.

## அறுவைச் சிகிச்சைத் துறை (‘அரங்கம்')

நீங்கள் அறுவைச் சிகிச்சை அரங்கத்துக்கு வரும்போது, பணியாளர் உறுப்பினர்கள் உங்கள் அடையாளத்தை, உங்களுக்குச் செய்யப்படவுள்ள அறுவைச் சிகிச்சையை மற்றும் உங்களுக்கு இருக்கக்கூடிய ஒவ்வாமைகளை உறுதிப்படுத்துவார்கள். உங்களுக்குக் கேள்விகள் அல்லது கவலைகள் எவையேனும் இருந்தால், நீங்கள் பணியாளர் உறுப்பினர் ஒருவரிடம் அவற்றைச் சொல்லவேண்டும்.

- உங்களைக் கவனித்துக்கொள்வதற்கு உங்கள் மயக்க மருந்து மருத்துவர், மயக்க மருந்து மருத்துவருக்கு உதவும் பணியாளர்கள் மற்றும் அறுவைச் சிகிச்சை அரங்கச் செவிலியர்கள் அங்கு இருப்பார்கள். பயிற்சி பெறும் மயக்க மருந்து மருத்துவர்கள், மருத்துவ மாணவர்களும் அங்கு இருக்கலாம். மாணவர்கள் அங்கு இருப்பது உங்களுக்கு வசதியான உணர்வை அளிக்காவிட்டால், நீங்கள் அதைச் சொல்லலாம்.

- உங்கள் இதயத் துடிப்பு, இரத்த அழுத்தம் மற்றும் ஆக்ஸிஜன் அளவைத் தொடர்ந்து கண்காணிக்கும் இயந்திரங்கள் இணைக்கப்படும். உங்கள் மார்பில் இருக்கும் ஒட்டக்கூடிய பட்டைகள் உங்களை இதய மேற்பார்வைக் கருவியுடன் இணைக்கும். உங்கள் விரலில் அல்லது காது மடலில் உள்ள ஒரு சிறு பிடிப்பான் உங்கள் இரத்தத்தில் உள்ள ஆக்சிஜன் அளவை அளவிடப் பயன்படுகிறது.
- மயக்க மருந்து மருத்துவர் ஓர் ஊசியைப் பயன்படுத்தி உங்கள் கையின் பின்பகுதியில் அல்லது தோள் பட்டையில் உள்ள ஒரு நரம்புக்குள் ஒரு கானுலாவை (மெலிதான பிளாஸ்டிக் குழாய்) நுழைப்பார். அறுவைச் சிகிச்சையின்போது உங்களுக்கு மருந்துகள் மற்றும் நீர்மங்களை வழங்குவதற்கு (ஒரு 'சொட்டு') இது பயன்படுகிறது. முதலில், அந்த இடத்தில் உணர்ச்சியற்ற நிலையை உண்டாக்குவதற்கு உங்களுக்கு ஓரிட மயக்க மருந்துக் கிரீம் கொடுக்கப்படலாம்.
- சில நேரங்களில், உங்களுடைய அறுவைச் சிகிச்சையின்போதும் அதன்பிறகும் உங்களுக்கு மருந்துகளை வழங்கவும் உங்களைக் கண்காணிக்கவும் உங்களுடைய கழுத்தில் மைய இணைப்பு என்று அழைக்கப்படும் இன்னொரு கானுலாவும் நுழைக்கப்படவேண்டியிருக்கலாம். தேவைப்பட்டால், உங்கள் மயக்க மருந்து மருத்துவர் உங்களிடம் இதைப்பற்றிப் பேசுவார்.
- அறுவைச் சிகிச்சையின் வகை, உங்கள் பொது நலனைப் பொறுத்து, மயக்க மருந்து மருத்துவர் ஒரு தமனியில் தமனி இணைப்பு என்று அழைக்கப்படும் இன்னொரு வகைக் கானுலாவையும் நுழைக்கலாம். இது பொதுவாக நீங்கள் தூங்கும்போது செய்யப்படுகிறது. உங்கள் இரத்த அழுத்தம் தொடர்ந்து அளவிடப்படுவதற்கு இது அனுமதிக்கிறது. அத்துடன், அறுவைச் சிகிச்சையின்போது கூடுதல் இரத்தப் பரிசோதனைகளுக்கும் இதைப் பயன்படுத்தலாம்.
- உங்களுக்கு முதுகெலும்பு மயக்க மருந்து அல்லது வலி நிவாரணத்துக்கான ஒரு தண்டுவட மருந்து அளிக்கப்படுகிறது என்றால், பொதுவாக பொது மயக்க மருந்து வழங்கலுக்கு முன்பாக இது செய்யப்படும்.

அனைத்துத் தயாரிப்புகளும் நிறைவடைந்தபிறகு, மயக்க மருந்து வல்லுனர் நீங்கள் மூச்சுவிடுவதற்கு ஒரு முகமூடியின் வழியாக ஆக்சிஜனை அளிப்பார், அதே நேரம், உங்கள் கன்னுலா-வில் மயக்க மருந்துகளை மெதுவாக வழங்குவார். இந்த நேரத்துக்குப்பிறகு, அறுவைச் சிகிச்சை நிறைவடையும்வரை உங்களுக்கு வேறு எதுவும் தெரியாது.

சில அறுவைச் சிகிச்சைகளின்போது, நீங்கள் தூங்கியபிறகு, அறுவைச் சிகிச்சையின்போது உங்கள் நிலையைக் கண்காணிக்கவும் உங்களுக்கு நீர்மங்களை வழங்கவும் குழுவுக்கு உதவுவதற்கென வேறு கருவிகளும் உங்களுக்குப் பொருத்தப்படலாம்.

## இரத்தமாற்றம்

பெரிய அறுவைச் சிகிச்சைகள் அனைத்தின்போதும் இரத்தமாற்றம் தேவைப்படலாம். மிகவும் தேவைப்பட்டால்தான் இரத்தம் வழங்கப்படுகிறது. நீங்கள் இரத்தமாற்றத்தைப் பெற விரும்பாவிட்டால், உங்கள் அறுவைச் சிகிச்சை நாளுக்கு முன்பாகவே நீங்கள் இதை உங்கள் மருத்துவர்களுடன் விவாதிக்கவேண்டும்.

நீங்கள் உங்களுடைய மயக்க மருந்து மருத்துவரை முன்கூட்டியே கேட்பதன்மூலம் இரத்தமாற்றத்தைப்பற்றியும் அதற்கு இருக்கக்கூடிய மாற்றுகளைப்பற்றியும் கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ளலாம். அல்லது, NHS இணையத் தளத்தில் இதுபற்றிப் பேசும் இந்தப் பக்கத்தை நீங்கள் பார்க்கலாம்:
www.nhsbt.nhs.uk/what-we-do/blood-services/blood-transfusion

## வலி நிவாரணம்

நன்கு வலியைக் குறைத்தல் முக்கியமாகும். இது உங்களை இன்னும் நன்றாக உணரச்செய்கிறது, நீங்கள் இன்னும் விரைவாகக் குணமாக உதவுகிறது, சில சிக்கல்களுக்கான வாய்ப்பையும் இது குறைக்கலாம்.

உங்களுடைய அறுவைச் சிகிச்சைக்குப்பின் உங்களால் சிரமமின்றி ஆழமாக மூச்சுவிட இயலுகிறது, நன்கு இரும இயலுகிறது என்றால், உங்களுக்கு நெஞ்சுத் தொற்று வரும் வாய்ப்பு குறைவு.

உங்களால் உங்களுடைய கால்களை அசைத்து நடக்க இயலுகிறது என்றால், உங்களுடைய கால்களில் அல்லது வேறு இடங்களில் இரத்தக் கட்டிகள் வருகிற (ஆழமான நரம்பு இரத்த உறைவு அல்லது DVT) வாய்ப்பு குறைவு.

மாத்திரை அல்லது திரவ வடிவில் வழக்கமான வலி நிவாரண மருந்து வாய் வழியாக அல்லது உங்கள் கன்னுலா-வுக்குள் வழங்கப்படும். பின்வரும் வலி நிவாரண வடிவங்களில் ஒன்று அல்லது பல உங்களுக்கு வழங்கப்படலாம், இதை உங்கள் மயக்க மருந்து வல்லுனர் உங்களுடன் விவாதிப்பார்.

### எபிட்யூரல்

உங்கள் மயக்க மருந்து மருத்துவர் ஓர் ஊசியைப் பயன்படுத்தி உங்களுடைய முதுகில் உள்ள எலும்புகளுக்கு நடுவில் ஒரு நுட்பமான பிளாஸ்டிக் குழாயை (வடிகுழாயை) நுழைக்கிறார். பொதுவாக, நீங்கள் தூங்குவதற்குமுன் இது செய்யப்படுகிறது. அறுவைச் சிகிச்சையின்போதும், அதன்பிறகு சில நாட்களுக்கும் இந்தக் குழாயின் வழியாக ஓரிட மயக்க மருந்து வழங்கப்படுகிறது. எபிட்யூரல் பயன்படுத்தப்படும்போது உங்களுடைய நெஞ்சு, அடிவயிறு மற்றும் கால்களில் உணர்ச்சியற்ற நிலை உண்டாகலாம், உங்கள் கால்கள் வழக்கம்போல் வலுவாக இல்லை என்று நீங்கள் உணரலாம். எபிட்யூரல் வேலை செய்யும்போது இது இயல்புதான். ஓரிட மயக்க மருந்தின் தாக்கம் குறைந்தபிறகு இயல்பு நிலை திரும்பிவிடும்.

எபிட்யூரல் மயக்க மருந்துபற்றி உங்களுடைய மொழியில் கூடுதல் தகவல்களைப் பெற, தயவுசெய்து எங்களுடைய இணையத் தளத்தைப் பாருங்கள்: www.rcoa.ac.uk/patientinfo/translations.

### முதுகெலும்பு மயக்க மருந்து

இடுப்பிலிருந்து நுனிக்கால்கள்வரையுள்ள நரம்புகளை உணர்ச்சியற்ற நிலைக்குக் கொண்டுவருவதற்கென, உங்களுடைய கீழ் முதுகில் உள்ள எலும்புகளுக்கு இடையில் வைக்கப்பட்ட ஓர் ஊசியின் வழியாக ஓரிட மயக்க மருந்து செலுத்தப்படுகிறது. பொதுவாக, உணர்ச்சியற்ற நிலை இரண்டு மணிநேரத்திலிருந்து நான்கு மணிநேரம்வரை நீடிக்கும். இன்னும் கூடுதல் நேரத்துக்குச் செயல்படுகிற, வலியைக் குறைக்கிற மருந்து ஒன்றும் ஊசி மூலம் செலுத்தப்படலாம், இது எட்டு மணிநேரம் அல்லது அதற்குமேல் நீடிக்கலாம்.

முதுகெலும்பு மயக்க மருந்துபற்றி உங்கள் மொழியில் கூடுதல் தகவல்களைப் பெற, தயவுசெய்து எங்களுடைய இணையத் தளத்துக்கு வாருங்கள்: www.rcoa.ac.uk/patientinfo/translations.

### நோயாளியிடம் கட்டுப்படுத்தப்பட்ட வலி உணரா நிலை (PCA)

இது வலியைக் குறைத்தலின் ஒரு வடிவம் ஆகும், இதை நீங்களே கட்டுப்படுத்துவீர்கள். வலியைப் போக்கும் வலுவான மருந்தைக் கொண்ட பம்ப் ஒன்று உங்கள் கானுலாவுடன்

இணைக்கப்படுகிறது. உங்களிடம் கையால் செயல்படுத்தும் கருவி ஒன்று தரப்படும். அதில் இருக்கும் பொத்தானானது பம்ப்பைச் செயல்படுத்தும். நீங்கள் பொத்தானை அழுத்தினால், ஒரு சிறிய அளவு கொடுக்கப்படும். தற்செயலாக அதிகமாக வருவதைத் தடுக்க காற்றாடி பாதுகாப்பு அமைப்புகளைக் கொண்டுள்ளது.

### காயம் வடிகுழாய்கள்

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சிறிய பிளாஸ்டிக் குழாய்கள் மூலம் உங்கள் காயத்தைச் சுற்றியுள்ள பகுதியில் பிராந்திய மயக்க மருந்து செலுத்தப்படுகிறது. காயத்தைச் சுற்றி உணர்ச்சியற்ற பகுதியை உருவாக்குவதே இதன் நோக்கம். அறுவை சிகிச்சையின் போது அறுவை சிகிச்சை நிபுணர் அல்லது மயக்க மருந்து நிபுணர் இந்த குழாய்களை வைக்கிறார். அவை தொடர்ந்து பிராந்திய மயக்க மருந்தை வழங்கும் காற்றாடி உடன் இணைக்கப்பட்டுள்ளன. உங்கள் அறுவை சிகிச்சைக்குப் பிறகு காயம் வடிகுழாய்கள் பல நாட்களுக்கு இருக்கும்.

சிலருக்கு, அறுவை சிகிச்சைக்குப் பிறகு வலி நிவாரணத்தின் திட்டமிட்ட வடிவத்தை மாற்ற வேண்டியிருக்கும்.

- சில மக்களுக்கு மற்றவர்களைவிடக் கூடுதலான வலிக் குறைப்பு தேவைப்படுகிறது, அல்லது, அவர்கள் வலியைக் குறைக்கிற மருந்துகளுக்கு வேறுவிதமாக எதிர்வினையாற்றுகிறார்கள். பதற்றமாக உணர்வது மக்கள் உணர்வும் வலியை மிகுதியாக்கலாம்.
- உங்களுக்கு வலி இருந்தால், உங்களுக்குப் பரிந்துரைக்கப்படும் வலியைக் குறைத்தல் அளவு கூட்டப்படலாம், மேலும் அடிக்கடி கொடுக்கப்படலாம் அல்லது வேறு கூட்டணியில் வழங்கப்படலாம்.

## அறுவைச் சிகிச்சைக்குப்பிறகு

பெரும்பாலான மக்கள் அறுவை சிகிச்சைக்குப் பிறகு மீட்பு பகுதியில் எழுந்திருப்பார்கள். மீட்புச் செவிலியர் ஒருவர் எப்போதும் உங்களுடன் இருப்பார். சிலர் நேரடியாக ஓர் ICU அல்லது HDUக்குச் செல்லலாம்.

மீட்புச் செவிலியர் இவற்றைச் செய்வார்:

- உங்கள் இரத்த அழுத்தம், ஆக்ஸிஜன் அளவு மற்றும் நாடித் துடிப்பு அளவைக் கண்காணிப்பார்
- முகமூடி அல்லது மூக்குக்குள் வைக்கப்பட்டுள்ள மென்மையான பிளாஸ்டிக் முனைகளின் வழியாக உங்களுக்கு ஆக்ஸிஜன் வழங்குவார்
- உங்கள் வலி அளவை மதிப்பிடுவார், தேவைப்பட்டால், உங்களுக்குக் கூடுதல் வலிக் குறைப்பை வழங்குவார்
- உங்களுக்கு உடல்நிலை சரியில்லாவிட்டால், அதைச் சரி செய்யும் மருந்துகளை உங்களுக்கு வழங்குவார்
- நீங்கள் குளிராக உணர்ந்தால், கதகதப்பாக்கும் போர்வை ஒன்றை உங்களுக்குப் போர்த்திவிடுவார்
- நீங்கள் விழித்திருந்தால், உங்கள் செயற்கைப் பற்கள், காது கேட்க உதவும் கருவி மற்றும் மூக்குக் கண்ணாடி/கான்டாக்ட் லென்ஸ்களை உங்களிடம் திருப்பித் தருவார்.

உங்களுக்கு வலியைக் குறைக்க எபிட்யூரல் பயன்படுத்தப்பட்டிருந்தால், அது எவ்வளவு செயல்திறனுடன் இருக்கிறது என்று மீட்பு செவிலியர் பரிசோதிப்பார். உங்களுக்கு சங்கடமாக இருந்தால், உங்கள் தண்டுவடம்வலி நிவாரண மயக்க மருந்து நிபுணர் இவ்விடைவெளியை சரிசெய்யலாம் அல்லது கூடுதல் வலி நிவாரணம் அளிக்கலாம்.

## தீவிர அல்லது உயர் சார்பு சிகிச்சை (ICU அல்லது HDU)

நீங்கள் விழித்திருந்து சௌகரியமாக இருக்கும்போது, நீங்கள் மீட்புப் பகுதியிலிருந்து தீவிர அல்லது உயர் சார்பு சிகிச்சைக்கு மாற்றப்படுவீர்கள், அங்கு நீங்கள் கூடுதல் நெருக்கமான கண்காணிப்பு மற்றும் தேவைப்பட்டால் சிறப்பு சிகிச்சையைப் பெறுவீர்கள்.

எப்போதாவது, அறுவை சிகிச்சை முடிந்த சில மணிநேரங்களுக்குப் பிறகு அல்லது உங்கள் நிலை சீராகும் வரை மயக்க மருந்தைத் தொடர வேண்டியது அவசியம். உங்களுக்கு இந்த வகைப் பராமரிப்பு தேவைப்பட்டால், உங்கள் மயக்க மருந்து மருத்துவர் உங்கள் அறுவைச் சிகிச்சைக்குப்பின் உங்களை நேரடியாக ICUக்கு அழைத்துச்செல்வார். மயக்க மருந்து தொடரும், உங்களுடைய மூச்சுவிடுதலில் உதவுவதற்கு ஒரு செயற்கை மூச்சுவிடல் கருவி (மூச்சுவிடுதல் இயந்திரம்) ஒன்று பயன்படுத்தப்படும். உங்கள் நிலை அனுமதிக்கும்போது, ICU குழு உங்களைச் சொந்தமாக மூச்சுவிட அனுமதிக்கும், நீங்கள் படிப்படியாக விழித்தெழுவீர்கள்.

அதிக சார்பு மற்றும் தீவிர சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்கள், செவிலியர்கள், இயன்முறை மருத்துவர்கள் மற்றும் உணவியல் நிபுணர்களால் நீங்கள் கவனிக்கப்படுவீர்கள். உங்கள் மீட்பு நன்றாக தொடர்கிறது என்பதை உறுதிப்படுத்த அவர்கள் உங்கள் அறுவை சிகிச்சை குழுவுடன் நெருக்கமாக வேலை செய்வார்கள். உங்களுடைய குணமாதல் தொடர்கிற நேரத்தில், நீங்கள் ICUவிலிருந்து HDUக்கு மாற்றப்படலாம்.

உங்களைக் கவனித்துக்கொள்வதற்கென ஒரு செவிலியர் இருக்கலாம், அல்லது இரண்டு நோயாளிகளை ஒரு செவிலியர் கவனித்துக்கொள்ளலாம். நீங்கள் வசதியாக உணர்வதை அவர்கள் உறுதிசெய்வார்கள், உடல்நிலை சரியில்லாமல் போவதைக் கட்டுப்படுத்தவும், இரத்தக் கட்டிகளைத் தடுக்கவும் பரிந்துரைக்கப்பட்டிருக்கிற மருந்துகளை உங்களுக்குக் கொடுப்பார்கள். நீங்கள் குணமாவதற்கு உதவுவதற்கென, நீங்கள் வீட்டில் எடுத்துக்கொள்கிற சில மருந்துகள் நிறுத்தப்படலாம் அல்லது மாற்றப்படலாம். தொடக்கத்தில் உங்கள் நரம்புகளில் நீர்மங்களை வழங்குவதற்கு ஒரு சொட்டு அமைப்பு தேவைப்படலாம். ஆனால், உங்களால் இயன்றவுடன் நீங்களே குடிக்கவேண்டும் மற்றும் சாப்பிடவேண்டும் என்று உங்கள் செவிலியர் உங்களை ஊக்குவிப்பார். ஏனெனில், இது உங்களுடைய குணமாதலுக்கு உதவுகிறது.

ICU அல்லது HDUவில் உங்களுடைய இதயத் துடிப்பு, இரத்த அழுத்தம், மூச்சுவிடுதல் மற்றும் சிறுநீரகச் செயல்பாடு தொடர்ந்து கண்காணிக்கப்படும். உங்களுக்கு இரத்தப் பரிசோதனைகள், X-கதிர்ப் படமெடுத்தல்கள் அல்லது ஸ்கான்களும் செய்யப்படலாம். இதன்மூலம் உங்கள் முன்னேற்றம் சரிபார்க்கப்படும், பிரச்சனைகள் எவையேனும் இருந்தால் கண்டறியப்படும். நீங்கள் குணமாக ஆக, உங்களுக்குத் தேவைப்படும் கண்காணிப்பு குறையும், உங்களுடைய சில சொட்டு அமைப்புகள், குழாய்கள் மற்றும் கண்காணிப்பான்கள் நீக்கப்படும்.

செவிலியர்களும் ஃபிசியோதெரபிஸ்ட்களும் உங்களுக்கு மூச்சுவிடுதல் பயிற்சிகளைக் கற்றுத்தருவார்கள், நீங்கள் அவற்றைத் தொடர்ந்து செய்யவேண்டும். நீங்கள் ICUல் அல்லது HDUல் இருக்கிற நேரம்முழுவதும் ஆழமாக மூச்சுவிடுவதும் செயல்திறனுடன் இருமுவதும் மிக முக்கியமாகும். இது நெஞ்சுத் தொற்றைத் தவிர்க்க உதவும்.

அத்துடன், இயன்றவரை விரைவாக நீங்கள் படுக்கையிலிருந்து எழவும் நகரவும் ஃபிசியோதெரபிஸ்ட்கள் உங்களுக்கு உதவுவார்கள். இது உங்கள் மூச்சுவிடுதல் பயிற்சிகளுக்கும் உதவுகிறது. குறிப்பாக, உங்கள் தசை வலிமையைப் பராமரிப்பதற்கு, கால்களில் இரத்த ஓட்டத்தை மேம்படுத்துவதற்கு, உங்கள் நலனை மேம்படுத்துவதற்கு, நகர்வதும் நடப்பதும் முக்கியமாகும்.

நீங்கள் ICUல் அல்லது HDUல் இருக்கும்போது, மற்றவர்கள் உங்களை வந்து பார்க்கலாம். பார்வையாளர்கள் நேரம் என்ன, எத்தனைப் பார்வையாளர்கள் உங்களைப் பார்க்கலாம் என்பதுபோன்ற தகவல்களை உங்கள் செவிலியர் உங்களுக்கு வழங்குவார். மிகவும் நோய்வாய்ப்பட்ட மற்ற நோயாளிகள் இருக்கும் பகுதியில் நீங்கள் கவனிக்கப்படலாம். இங்கு இளம் குழந்தைகள் வருவது பொருத்தமாக இருக்காது. இங்கு நிறையச் செயல்பாடுகள் இருந்தால், வருகையாளர்கள் தாற்காலிகமாகத் தடை செய்யப்படவேண்டிய தேவை இருக்கலாம்.

## குணமடைந்து வீடு திரும்புவது

ICU அல்லது HDUல் உங்களைக் கவனித்துக்கொள்ளும் குழுவினர் நீங்கள் பாதுகாப்பாகக் குணமடைந்துவருகிறீர்கள் என்று மனநிறைவு கொள்ளும்போது, நீங்கள் அறுவைச் சிகிச்சைப் பிரிவுக்குத் திரும்புவீர்கள்.

நீங்கள் ICU அல்லது HDUல் செலவிடும் நேரம் மற்றும் நீங்கள் எப்போது வீடு திரும்ப இயலும் ஆகியவை நீங்கள் என்ன அறுவைச் சிகிச்சை செய்துகொண்டுள்ளீர்கள், அதில் ஏதேனும் சிக்கல்கள் இருந்தனவா என்பவற்றைப் பொறுத்தும், உங்களுக்கு இருக்கக்கூடிய வேறு நலப் பிரச்சனைகளைப் பொறுத்தும் அமையும்.

சில மருத்துவமனைகள் மேம்பட்ட மீட்பு போன்ற மறுவாழ்வுத் திட்டங்களை வழங்குகின்றன. இவற்றைப்பற்றி மேலும் தெரிந்துகொள்ள, இங்கு வாருங்கள்: www.nhs.uk/conditions/enhanced-recovery

அறுவைச் சிகிச்சைக்குப்பின் நீங்கள் வண்டி ஓட்ட இயலாது. அதனால், வாடகை வண்டி ஒன்றுக்கு நீங்கள் ஏற்பாடு செய்யவேண்டும், அல்லது, இன்னொருவர் உங்களை அழைத்துச்செல்ல ஏற்பாடு செய்யவேண்டும்.

டிஸ்சார்ஜ் செய்யப்படுவதற்கு முன், நீங்கள் குணமடைய நீங்கள் செய்ய வேண்டிய பயிற்சிகள் மற்றும் உங்கள் காயத்தை எவ்வாறு கவனிப்பது என்பது பற்றிய தகவல் உங்களுக்கு வழங்கப்படும்.

பின்வரும் சந்தர்ப்பங்களில் நீங்கள் அறுவைச் சிகிச்சை செய்த உங்கள் பொது மருத்துவர் அல்லது மருத்துவமனையை நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டும்:

- கடுமையான வலி அல்லது உங்கள் வலி அதிகரிப்பு
- அறுவைச் சிகிச்சை செய்த இடத்தில் வலி மற்றும் வீக்கம் உருவாகியிருப்பது
- உங்களுக்கு நெஞ்சு வலி அல்லது மூச்சுவிடுதலில் சிரமம் இருப்பது
- வீடு திரும்பும்போது மருத்துவமனை உங்களுக்கு வழங்கிய தகவல்களில் பேசப்படாத வேறு கவலைகள் உங்களுக்கு இருப்பது.

உங்களுடைய உடல்நிலை மிகவும் சரியில்லாவிட்டால், நீங்கள் இயன்றவரை விரைவாக உங்களுக்கு அருகிலுள்ள நெருக்கடி நேரப் பிரிவுக்குச் செல்லவேண்டும்.

# ஆபத்து மற்றும் பகிர்ந்துகொள்ளப்பட்ட தீர்மானமெடுத்தல்

நவீன மயக்க மருந்துகள் மிகவும் பாதுகாப்பானவை. பயன்படுத்தப்படும் மயக்க மருந்துகள் அல்லது கருவிகளிடமிருந்து சில பொதுவான பக்க விளைவுகள் வரக்கூடும். பொதுவாக இவை தீவிரமாக இருக்காது, நெடுநாள் நீடிக்காது. ஆபத்துகள் ஒவ்வொருவருக்கும் வேறுபடும். இவை அறுவைச் சிகிச்சை மற்றும் பயன்படுத்தப்பட்ட மயக்க மருந்து உத்தியைப் பொறுத்து அமையும்.

உங்களுடைய மயக்க மருந்து நிபுணர் உங்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அவர்கள் நினைக்கும் ஆபத்துகளை, உங்களுடன் கலந்தாய்வு செய்வார். அவ்வளவாகப் பொதுவில் காணப்படாத ஆபத்துகள் உங்களுக்குப் பொருந்தினால்தான் அவர்கள் அவற்றைப்பற்றி விவாதிப்பார்கள்.

## பகிர்ந்துகொள்ளப்பட்ட தீர்மானமெடுத்தல்

தனிநபர்கள் தங்களுக்கு சரியான முடிவுகளை எடுப்பதற்கு ஆதரவளிப்பதை உறுதி செய்கிறது பகிர்ந்தெடுக்கும் முடிவுகள். இது ஒரு கூட்டு செயல்முறையாகும். இதன் மூலம் ஒரு மருத்துவர் நோயாளியின் சிகிச்சையைப் பற்றி முடிவெடுக்க உதவுகிறார்.

உரையாடல் கீழ்க்கண்டவற்றை ஒன்றிணைக்கிறது:

- சிகிச்சை விருப்பங்கள், சான்றுகள், ஆபத்துகள் மற்றும் நன்மைகள் போன்றவைகளில் மருத்துவரின் நிபுணத்துவம்
- நோயாளிக்கு நன்றாகத் தெரிந்தவை: அவர்களின் விருப்பங்கள், தனிப்பட்ட சூழ்நிலைகள், குறிக்கோள்கள், மதிப்புகள் மற்றும் நம்பிக்கைகள்.

மேலும் அறிய: www.england.nhs.uk/personalisedcare/shared-decision-making

உங்கள் மயக்க மருந்து நிபுணர் அல்லது அறுவை சிகிச்சைக்கு முந்தைய மதிப்பீட்டு ஊழியர்களுடன் உங்கள் கலந்துரையாடல்களைப் பயன்படுத்துவதற்கு நீங்கள் பயன்படுத்தக்கூடிய சில கருவிகள் இங்கே:

### புத்திசாலித்தனமாக UK BRAN கட்டமைப்பைத் தேர்ந்தெடுப்பது

சிகிச்சை பற்றிய கேள்விகளைக் கேட்க இதை நினைவூட்டலாகப் பயன்படுத்தவும்.
https://bit.ly/CWUK_leaflet

### NHS மூன்று கேள்விகளைக் கேட்கிறது

உங்கள் உடல்நலம் பற்றிய தேர்வுகள் இருக்கலாம்.
https://bit.ly/NHS_A3Qs

### அறுவை சிகிச்சைக்கு முந்தைய பராமரிப்பு மையம் (CPOC)

CPOC-ஆனது பகிரப்பட்ட முடிவெடுப்பை விளக்க அசைவுப்படத்தை உருவாக்கியுள்ளது.
www.cpoc.org.uk/shared-decision-making

## நீங்கள் கேட்க விரும்பும் கேள்விகள்

உங்கள் மயக்க மருந்து பற்றி உங்களுக்கு கேள்விகள் இருந்தால், அவற்றை எழுதுங்கள் (கீழே உள்ள உதாரணங்களைப் பயன்படுத்தி, கீழே உள்ள இடத்தில் உங்களுடைய கேள்விகளைச் சேர்க்கலாம்). உங்கள் அறுவைச் சிகிச்சை நாளுக்கு முன்பாக நீங்கள் மயக்க மருந்து மருத்துவர் ஒருவருடன் பேச விரும்பினால், அறுவை சிகிச்சைக்கு முந்தைய மதிப்பீட்டுக் குழுவைத் தொடர்புகொள்ளுங்கள். நீங்கள் மயக்க மருந்து மருத்துவர் ஒருவருடன் தொலைபேசியில் பேசுவதற்கு அல்லது அவரை ஒரு மருந்தகத்தில் சந்திப்பதற்கு அவர்களால் ஏற்பாடு செய்ய இயலும்.

1. **குறிப்பாக எனக்கு உள்ள ஆபத்துகள் என்ன?**
2. **எந்த வகை வலிக் குறைப்பு எனக்கு மிக நன்றாகப் பொருந்தும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?**
3. **குறிப்பாக எனக்கு HDU அல்லது ICU ஏன் தேவைப்படும்?**

## கூடுதல் தகவல் வளங்கள்

உங்கள் மொழியில் கூடுதல் தகவல் சிற்றேடுகளைப் பெறுவதற்கு, தயவுசெய்து எங்கள் இணையத் தளத்துக்கு வாருங்கள்: www.rcoa.ac.uk/patientinfo/translations.

உங்கள் மருத்துவமனையில் உள்ள மயக்க மருந்துப் பிரிவு அல்லது முன் மதிப்பீட்டு மருத்துவமனையிலும் இந்தச் சிற்றேடுகள் கிடைக்கலாம்.

தீவிரச் சிகிச்சை அமைப்பானது தீவிரச் சிகிச்சைபற்றி நோயாளிகளுக்கும் கவனித்துக்கொள்பவர்களுக்கும் விளக்குகிற பயனுள்ள வளங்களைக் கொண்டுள்ளது: www.ficm.ac.uk/for-patients

## உரிமைத் துறப்பு

இந்த துண்டுப்பிரசுரத்தில் உள்ள தகவல்களை துல்லியமாகவும் புதுப்பித்ததாகவும் வைத்திருக்க நாங்கள் மிகவும் முயற்சி செய்கிறோம், ஆனால் இதற்கு நாங்கள் உத்தரவாதம் அளிக்க முடியாது. இந்தப் பொதுவானத் தகவல், உங்களுக்கு இருக்கக்கூடிய அனைத்து கேள்விகளையும் கொண்டுள்ளது அல்லது உங்களுக்கு முக்கியமானவையாக இருக்கக்கூடிய அனைத்தையும் கையாளும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இந்த துண்டுப்பிரசுரத்தை ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்தி, உங்கள் தேர்வுகள், மற்றும் உங்களுக்குள்ள ஏதேனும் கவலைகள் பற்றி உங்கள் மருத்துவக் குழுவுடன் நீங்கள் கலந்தாலோசிக்க வேண்டும். இந்தத் துண்டுப் பிரசுரம் மட்டும் தனியாக ஒரு அறிவுரையாகக் கருதப்படக் கூடாது. இதை எந்த வணிக அல்லது தொழில் நோக்கத்திற்கும் பயன்படுத்துமுடியாது. முழுமையான பொறுப்புத் துறப்பிற்கு தயவுசெய்து இங்கே கிளிக் செய்க (www.rcoa.ac.uk/patient-information/translations/tamil).

அனைத்து மொழிபெயர்ப்புகளும் Translators without Borders சமுதாயத்தால் வழங்கப்படுகின்றன. மொழிப்பெயர்ப்பை முடிந்தவரை துல்லியமாக இருக்க, மொழிப்பெயர்ப்பின் தரம் சரிபார்க்கப்படுகிறது, ஆனால், சில தகவல்களில் தவறுகள் மற்றும் தவறான விளக்கம் ஏற்படும் ஆபத்து உள்ளது.

# நீங்கள் நினைப்பதை எங்களிடம் பகிரவும்

உங்களிடம் ஏதேனும் பொதுவான கருத்துகள் இருந்தால், அவைகளைபின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்:patientinformation@rcoa.ac.uk

**மயக்க மருந்து வல்லுனர்களுக்கான அரசக் கல்லூரி**
சர்ச்சில் ஹவுஸ், 35 ரெட் லயன் ஸ்கொயர், லண்டன் WC1R 4SG
020 7092 1500

# www.rcoa.ac.uk

**மூன்றாம் பதிப்பு, ஏப்ரல் 2023**
இந்தச் சிற்றேடு பதிப்பான நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் ஆராயப்படும்.

**© 2023** RCoA
நோயாளித் தகவல் தாள் உருவாக்கும் நோக்கத்திற்காக இந்தத் சிற்றேட்டை பிரதியெடுத்துக் கொள்ளலாம். இந்த அசல் மூலத்தை தயவுசெய்து மேற்கோள் காட்டுங்கள். இந்தச் சிற்றேட்டின் ஒரு பகுதியை நீங்கள் இன்னொரு வெளியீட்டில் பயன்படுத்த விரும்பினால், சரியான ஒப்புகை வழங்கப்பட வேண்டும், வணிகச் சின்னங்கள், அடையாளக் குறியிடுதல், படங்கள் மற்றும் படவுருக்கள் நீக்கப்படவேண்டும். மேலும் தகவல்களுக்கு, தயவு செய்து எங்களை தொடர்பு கொள்ளவும்.